# தனியார் மயத்தை நோக்கி த.வெ.க. அரசின் நிதிநிலை அறிக்கை!

## தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிக்கை!



சென்னை, ஆக. 11–

தனியார் மயத்தை நோக்கி த.வெ.க. அரசின் நிதி நிலை அறிக்கை இருக்கிறது என தொ.மு.ச. பொதுச் செயலாளர் மு.சண்முகம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அது வருமாறு:–

தமிழ்நாட்டில் வெறுப்புணர்ச்சியையும், பொய்களை பரப்பியும் போலியான பிம்பத்தை உருவாக்கி ஜோசப் விஜய் அனைத்தையும் தீர்க்கும் ரட்சகராக முன்னிலைப் படுத்தியும், தாய் மாமன் சீர், அண்ணன் சீர், மகளிருக்கு மாதம் ரூ.2500/–, படித்து வேலையில்லா இளைஞர்களுக்கு ரூ.4,000, பள்ளி செல்லும் குழந்தையின் தாய்க்கு ஆண்டுக்கு ரூ.15,000, ஆண்டுக்கு 6 எரிவாயு உருளைகள், 5 ஏக்கர் நிலமுள்ள விவசாயி களின் கடன் முழுமையாக தள்ளுபடி, 5 ஏக்கருக்கு மேல் நிலமுள்ள விவசாயிகளுக்கு கடன் தொகையில் 50 சதவிகிதம் தள்ளுபடி, மீன்பிடி தடை காலத்தில் வேலையில்லா மீனவர்களுக்கு ரூ.20000 உதவித் தொகை வழங்குவது போன்ற கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை அளித்தும் ஆட்சி நிர்வாகத்தின் அரிச்சுவடியே தெரியாமல் தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டின் கடன் ரூ.10 லட்சம் கோடி, பொதுத் துறை நிறுவனங்களின் கடனையும் சேர்த்து ரூ.13 லட்சம் கோடி கடன் பெற்றது என்ற மாய தோற்றத்தை ஏற்படுத்தியும் தீய சக்தி – சுயசக்தி என வசனம் பேசியும், இன்ஸ்டாகிராம் – வாட்ஸ்அப் – ஃபேஸ்புக் போன்றவற்றில் இன்புளியன்சர்களை (Influencer) வைத்து வதந்திகளைப் பரப்பி ஆட்சிப் பொறுப்பேற்றார் ஜோசப் விஜய்.

பதவி ஏற்று ஆற்றிய முதல் உரையில் தமிழ்நாட்டின் கஜானாவை வழித்துத் துடைத்து வைத்து விட்டதாக பிரசங்கம் செய்தார். அதனை மெய்ப்பிக்க நிதிநிலை வெள்ளை அறிக்கை – மின்வாரிய வெள்ளை அறிக்கை என கபட நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. தற்போது த.வெ.க. அரசின் நிதிநிலை அறிக்கை 2026–27ஐ 05.08.2026 அன்றும், வேளாண் துறையின் நிதிநிலை அறிக்கை 06.08.2026 அன்றும் சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. வழித்துத் துடைத்து வைத்து விட்டுப்போன தமிழ்நாட்டில் 2026–27 ஆம் ஆண்டு திருத்த வரவு – செலவு திட்ட மதிப்பு ரூ.3,50,027– கோடிக்கு வரவும், ரூ.4,05,802 கோடி செலவும் கொண்ட நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வெள்ளை அறிக்கையில் தி.மு.கழக ஆட்சி காலமான 2021–22 முதல் 2025–26 வரையில் தவறான கொள்கை காரணமாக 2026–27ஆம் நிதியாண்டில் நாம் எதிர்கொள்ளவிருக்கும் உடனடி சவால்களையும் இது ஆய்வு செய்கிறது. கண்டறியப்பட்ட ஆய்வு முடிவுகள் மிகவும் கவலை யளிப்பதாக உள்ளன. இவை மாநில நிதியின் அமைப்பு ரீதியான வீழ்ச்சியைப் புலப்படுத்துகின்றன. இந்நிலையை சீரமைக்கத் தவறினால் அது ஆண்டுதோறும் பன்மடங்காகப் பெருகி, அதை தாங்கும் சக்தி மிகவும் குறைந்த இளைய தலைமுறையினரைத்தான் மிகக் கடுமையாகப் பாதிக்கும் என வெள்ளை அறிக்கை முகவுரையில் ஜோசப் விஜய் பதிவு செய்துள்ளார்.

வெள்ளை அறிக்கையில் கவலைப்பட்ட த.வெ.க. அரசு அதனை சரி செய்யும் நோக்கமும் – தொலை நோக்கு செயல் திட்டமும் நிதிநிலை அறிக்கையில் இல்லை. த.வெ.க.வின் வாக்குறுதிகள் – கொள்கைகளை அடுத்த 5 ஆண்டுக்கு எடுத்துச் சென்று நிறைவேற்றும் வகையிலான அறிவிப்புகள் இல்லை. வெள்ளை அறிக்கையில் 2021–22 முதல் 2025–26 வரையில் வருவாய்ப் பற்றாக்குறையை கட்டுப்படுத்த வில்லை. அரசின் வருவாய் மற்றும் செலவினத்தில் ஊழலற்ற நேர்மையான நிர்வாகத்தை மேற்கொள்வதன் மூலம் சீர் செய்ய முடியும் என வாய்ச் சவடால் பேசிய ஜோசப் விஜய் அரசின் திருத்திய நிதிநிலை அறிக்கையில் வருவாய்ப் பற்றாக்குறை ரூ.55,775 கோடியாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. தி.மு.கழக அரசின் இடைக்கால நிதிநிலை அறிக்கையில் வருவாய்ப் பற்றாக்குறை ரூ.48,689 கோடி என நிர்ணயிக்கப் பட்டது. த.வெ.க. அரசின் திருத்திய நிதிநிலை அறிக்கையில் வருவாய் பற்றாக்குறை ரூ.7,079 கோடி கூடுதலாகியுள்ளது . தி.மு.கழக அரசு மூலதன செலவு செய்வதில் தவறி விட்டது என குற்றம் சாட்டிய ஜோசப் விஜய் தனது அரசு நிதிநிலையில் மூலதன செலவு ரூ.56,985 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் தி.மு.க. ஆட்சியின் இடைக்கால நிதிநிலை அறிக்கையில் மூலதன செலவு ரூ.59,562 கோடி என நிர்ணயம் செய்யப்பட்டது. கடன் வாங்கி மூலதன செலவு செய்யாமல் தமிழ்நாட்டை பாழ்படுத்தியதாக புலம்பிய த.வெ.க. அரசின் வெள்ளை அறிக்கைக்கு முற்றிலும் மாறாக மூலதன செலவில் ரூ.2,577 கோடியைக் குறைத் துள்ளது.

தி.மு.கழக அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டின் கடன் அளவை ரூ.10 லட்சம் கோடியாக உயர்த்தியுள்ளது எனக் குற்றம் கூறிய ஜோசப் விஜய் அரசு இந்த ஆண்டு ரூ.1,21,819 கோடி கடன் வாங்க உள்ளதாக வரவு – செலவு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதித் துறைச் செயலாளர் சித்திக் இ.அ.ப. அவர்கள் ஒன்றிய அரசின் அனுமதியின்றி கடன் வாங்க முடியாது என்றும் 50 ஆண்டுகளானாலும் கடன் வாங்காமல் இருக்க முடியாது எனவும் கூறியுள்ளார். தி.மு.க. அரசை கடன் வாங்கிய அரசு என வாய் கிழிய பேசிய ஜோசப் விஜய் தற்போது மௌனமானது ஏன்? அரசு – நிர்வாகப் பொருளாதாரம் என எதையும் தெரிந்து கொள்ளாமல், புரிந்து கொள்ளாமல் சேற்றை வாரி இறைத்ததை இப்போதாவது உணர்வாரா ஜோசப் விஜய்? என்பதுதான் நமது கேள்வி.

ஜோசப் விஜய் அரசின் நிதி நிலை அறிக்கை தங்களது வெள்ளை அறிக்கையின் நீட்சியாக பார்க்க வேண்டியுள்ளது. த.வெ.க. அரசின் வெள்ளை அறிக்கையில், கடந்த காலங்களில், நிதியுதவி பெறும் நிறுவனங்களின் பணியாளர்களைத் தமிழ்நாடு அரசு, அரசுப் பணியாளர்களாக ஈர்த்துக் கொண்டதன் விளைவாக, அரசின் சம்பளச் செலவினச் சுமை மேலும் கூடியுள்ளது எனவும் ஊதியக் குழுக்களின் பரிந்துரைகள், செலவீனங்களில் திடீர் உயர்வை ஏற்படுத்தி, வரவு – செலவுத் திட்டத்தில் கூடுதல் சுமையை உண்டாக்கியுள்ளது. சம்பளத்திற்கான மொத்த செலவு 2021–22 ஆம் ஆண்டில் 60,630 கோடி ரூபாயிலிருந்து 2025–26 ஆம் ஆண்டு முதல் நிலை கணக்குகளின்படி 83,320 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இது 5 ஆண்டு காலத்தில் ஏற்பட்டுள்ள 37 சதவிகித உயர்வாகும் என தெரிவித்தது. அதன் எதிரொலிதான் 2026 – 27 ஆம் ஆண்டின் திருத்திய நிதிநிலை அறிக்கை யில் ஊதிய செலவுத் தொகையில் ரூ.3,346 கோடியை குறைத் துள்ளது. இதனை வெறும் தொகை குறைப்பாகக் கருத முடியாது. இதன் பின்னணியில் அரசில் உள்ள காலி பணியிடங்கள் நிரப்புவதை கேள்விக்குறியாக்கும், பதவி உயர்வு, அகவிலைப்படி உயர்வு போன்றவை நிறுத்தி வைக்கும் அபாயம் ஒளிந்துள்ளது.

ஓய்வூதியத்திற்கான செலவு த.வெ.க. அரசின் வெள்ளை அறிக்கையில் ஓய்வூதிய மொத் செலவீனம் 2021–22 இல் இருந்த 23,185 கோடி ரூபாயிலிருந்து, 2025–26 முதல் நிலைக் கணக்குகளின்படி 38,745 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இது ஐந்தாண்டு காலத்தில் ஏற்பட்டுள்ள 67 சதவிகித உயர்வை காட்டுகிறது என புலம்பி யுள்ளது. மேலும், இந்தியாவின் பெரிய மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தனிநபர் வாரியான ஓய்வூதியச் செலவினத்தில் தமிழ்நாடு 2024–25 ஆம் ஆண்டில் (ரூ.4682 கோடி) முதலிடத்தில் உள்ளது. ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களின் அதிகப்படியான எண்ணிக்கையும், பழைய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் கடந்த காலங்களில் நடைமுறையில் இருந்த தாராளமான ஓய்வூதிய விதிகளுமே இந்த உயர்வுக்கு காரணமாகும் என வெள்ளை அறிக்கையில் ஜோசப் விஜய் அரசு பதிவிட்டுள்ளது.

மேலும், புதிய உத்திரவாத ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணியாளர்கள் இறுதியாக பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப் படியை உள்ளடக்கிய தொகையில் 50 சதவிகிதத்தை ஓய்வூதியமாக பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் அரசு வழங்க வேண்டிய உத்தரவாத பொறுப்புத் தொகைக்கும் இடையே ஏதேனும் பற்றாக்குறை ஏற்படும் நேர்வில், அந்த முழு நிதிப் பொறுப்பையும் அரசே ஏற்கும். இந்தப் புதிய திட்ட மாற்றத்தினால், தோராயமாக 13,000 கோடி ரூபாய் மதிப்பிலான ஒரு முறைக்கான இடைக்கால நிதி தேவைப்படுவதுடன் ஆண்டுதோறும் சுமார் 5000 கோடி ரூபாய் கூடுதல் தொடர் பங்களிப்புத் தொகையும் தேவைப்படும் என வெள்ளை அறிக்கை கூறுகிறது. அதன் வெளிப்பாடே திருத்திய நிதிநிலை அறிக்கையில் ஓய்வூதிய செலவினத்திற்கான ஒதுக்கீட்டில் 3,477 கோடி ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் சுமார் 5000 கோடி ரூபாய் கூடுதலாக தொடர் பங்களிப்பு ஒதுக்கப்படாததால் 8477 கோடி ரூபாய் ஓய்வூதிய நிதிக்கு பற்றாக்குறைவு ஏற்படும். ஏற்கெனவே அரசாணை (MS) எண் 111 நாள் 16.06.2026–ன் மூலம் கடைசி மாத அடிப்படை சம்பளத்தில் 50 சதவிகிதம் என்பதை 30 சதவிகிதமாக இடைக்கால ஏற்பாடாக குறைத்துள்ளது மேலும் அய்யத்தை ஏற்படுத்துகிறது. உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை கேள்விக் குறியாக்குவதோடு, ஜோசப் விஜய் அளித்த தேர்தல் வாக்குறுதியான பழைய ஓய்வூதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்பது காற்றில் கரைந்த கற்பூரமாகும் என்ற ஆபத்து உள்ளது.

● த.வெ.க. அரசின் நிதிநிலை அறிக்கையில் எண்ணூர் அனல் மின் திட்ட விரிவாக்கம் ரூ.8,000 கோடி ரூபாய் திட்டம் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

● மின் கல ஆற்றல் சேமிப்பு திட்டம் (BESS) தனியார் முதலீட்டை எளிமையாக்கி நடைமுறைப் படுத்தப்படும் எனக் கூறியுள்ளது.

● கோயம்புத்தூர் – அரியலூர் 765 கே.வி. மின் பகிர்மான பாதை திட்டம் 4000 கோடி ரூபாய் மதிப்புடையது. தனியார் பங்களிப்புடன் (PPP) செயல்படுத்தப்படும் எனக் கூறியுள்ளது.

● விருதுநகர் – கோயம்புத்தூர் 765 கே.வி. மின் பகிர்மானத் திட்டம் 1640 கோடி ரூபாய் மதிப்பி லான திட்டம் மற்றும் 11,760 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை கையாள 6,884 கோடி ரூபாய் தேவையான நிதி உதவிப் பெறப்படும் என அறிவித்துள்ளது.

● அரசு தனியார் கூட்டாண்மை முறையில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் மின்சார வாகனங்களுக்கான 20,000 பொது சார்ஜிங் நிலையங்கள் அமைக்கப்படும் எனக் கூறியுள்ளது.

● நடப்பு நிதியாண்டில் சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு குளிர்சாதன வசதிகளை கொண்ட 1000 பேருந்துகள் மொத்த செலவு ஒப்பந்த முறையில் (Gross Cost Contract) முறையில் தனியார் பேருந்துகளை இயக்க அறிவிக்கப்பட்டுள்ளது. மொத்த செலவு ஒப்பந்த முறை பேருந்து வாங்கிட உள்ளதால் மேம்பாட்டு பணிக்கு ரூ.500 கோடி ஒதுக்கியுள்ளது. புதிய பேருந்து கொள்முதலுக்கு நிதி ஒதுக்கவில்லை.

● அமைப்புசாரா தொழிலாளர்கள் மற்றும் இணைய வழி தொழிலாளர்கள் நலன்சார்ந்த அறிவிப் புக்களோ இடம் பெறவில்லை.

● ஏற்கெனவே சேலம் குடிநீர் வழங்கும் திட்டத்தை ஜெர்மன் நிறுவனத்திற்கு த.வெ.க. அரசு வழங்கியுள்ளது.

● தமிழ்நாடு மாநில வாணிபக் கழக (TASMAC) சில்லரை விற்பனை கடைகளை தனியார் வசம் ஒப்படைப்போம், Restobar ஆக மாற்ற உள்ளோம், தனியார் பார்களிடம் விடப்படும் எனவும், இணைய வழியாக மது விற்பனை செய்யப்படும் என புதுப்புது அறிவிப்புகள் வந்த வண்ணம் உள்ளது.

● தூய்மைப் பணியாளர், செவிலியர், ஆசிரியர்கள் என பணி நிரந்தரம் கோரி போராடி வருகிறார்கள். நிதிநிலை அறிக்கையில் புதிய பணியாளர் நியமனம் – பணி நிரந்தரம் – காலமுறை ஊதியம் சம்மந்தமான அறிவிப்புகளும், புதிய வேலை வாய்ப்பை உருவாக்கும் அறிவிப்பும் இல்லை.

மொத்தத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் அனைத்தும் தனியார் மய பாதையில், ஜோசப் விஜய் அரசு தனியார் மயத்தை நோக்கிச் செல்லும் என்பதை நிதிநிலை அறிக்கை கூறுகிறது. மக்கள் நலன், தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்க த.வெ.க. அரசை நிர்பந்திக்க ஜனநாயகப் பாதையில் போராடத் தயாராவோம்.

இவ்வாறு மு.சண்முகம் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### செயற்கை நுண்ணறிவு சார்ந்த பணிச்சூழலுக்கு

# மாணவர்களை தயார் படுத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் – டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



*புதுடெல்லி, ஆக. 11-*

*திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள், ஆகஸ்ட் 10, 2026 அன்று மக்களவையில், செயற்கை நுண்ணறிவின் விரைவான வளர்ச்சிக்கு ஏற்ப தாராளக் கலைக் கல்வியில் தொழில்நுட்ப அறிவு, அறநெறி, படைப்பாற்றல் மற்றும் விமர்சனச் சிந்தனையை ஒருங்கிணைத்தல், உயர்கல்வி நிறுவனங்களில் பல்துறை கல்வியை ஊக்குவித்தல் மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த பணிச்சூழலுக்கு மாணவர்களைத் தயார்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.*



திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மாநகரம் திருமுல்லைவாயில் 9 வது வார்டு கழக மூத்த நிர்வாகி ரத்தினராஜ் அவர்களின் திருவுருவப் படத்தை மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் சா. மு. நாசர் திறந்து வைத்து மரியாதை செலுத்தினார். அருகில் ஆவடி மாநகர் மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், நிர்வாகிகள் ராஜி சரவணன் உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தாம்பரம் மாநகரம், 33 வது வட்டக் கழக முன்னாள் வட்ட துணைச் செயலாளரும், கழக முன்னோடியுமான ஏ.முனியன் மறைவுற்றதை அடுத்து அவரது திருவுருவப் படத்தினை தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலகண்ணன் திறந்து வைத்தார். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன் கலந்து கொண்டு அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர் சுரேஷ், வட்டக் கழக செயலாளர் எம்.வினோத், முன்னோடிகள் ஏ.சிவக்குமார், நாகராஜ், ஏ.ஸ்டாலின், ஏ.தினகரன், இ.சுந்தர், ரஹமதுல்லா, விக்கி உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

*ஒன்றிய அரசின் கல்வித் துறை இணை அமைச்சர் டாக்டர் சுகந்த மஜூம்தார் அவர்கள் அளித்த பதிலில், தேசிய கல்விக் கொள்கை 2020ன் கீழ் முழுமையான, பல்துறை மற்றும் மாணவர்களை மையமாகக் கொண்ட உயர்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். கலை, படைப்பாற்றல் மற்றும் பகுப்பாய்வுப் பாடங்களுடன் செயற்கை நுண்ணறிவு, பெருந்தரவு பகுப்பாய்வு மற்றும் இயந்திரக் கற்றல் போன்ற நவீன தொழில்நுட்பத் துறைகளையும் ஒருங்கிணைத்து கற்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.*

*பல்கலைக்கழக மானியக் குழுவின் பல்துறை உயர்கல்வி வழிகாட்டுதல்களின் கீழ், 202324 அகில இந்திய உயர்கல்வி ஆய்வின்படி, 500க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களும் 5,000க்கும் மேற்பட்ட இணைப்புக் கல்லூரிகளும் பல்துறை கல்வித் திட்டங்களை வழங்கி வருகின்றன. தேசிய கல்விக் கடன் கட்டமைப்பை 700க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களும் 7,500க்கும் மேற்பட்ட இணைப்புக் கல்லூரிகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. இதன்படி, தாராளக் கலை மாணவர்கள் உட்பட மாணவர்கள் தங்கள் படிப்புக்கான மொத்த கல்விக் கடன்களில் 50 சதவீதம் வரை வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் சார்ந்த திறன் பாடங்கள் மூலம் பெற முடியும்.*

*ஸ்வயம் இணையவழிக் கல்வித் தளத்தில் 140க்கும் மேற்பட்ட இலவச செயற்கை நுண்ணறிவு சார்ந்த பாடங்கள் வழங்கப்பட்டு வருவதுடன், இதுவரை 50 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் அவற்றில் சேர்ந்துள்ளனர். மேலும், செயற்கை நுண்ணறிவுக்கான திறன் தயார்நிலைத் திட்டத்தின் மூலம் விமர்சனச் சிந்தனை, மின்னணு அறிவுத் திறன் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த பணிச்சூழலுக்குத் தேவையான திறன்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.*

*பிரதம மந்திரி உயர் கல்வி இயக்கத்தின் கீழ் மாநிலப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் தரத்தை மேம்படுத்த நிதியுதவி வழங்கப்பட்டு வருவதாகவும், பல்துறை கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பல்கலைக்கழகங்கள் திட்டத்தின் கீழ் 35 பல்கலைக்கழகங்களுக்கு தலா ரூ.100 கோடி ஒதுக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும், ஒன்றிய அரசின் கல்வித் துறை மாண்புமிகு இணை அமைச்சர் டாக்டர் சுகந்த மஜூம்தார் அவர்கள், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.*

### 85ஆம் ஆண்டு உதய நாள் காணும்

## முத்தமிழறிஞர் கலைஞர் மூத்த பிள்ளை முரசொலிக்கு வாழ்த்துப்பா!



அடக்குமுறை
காலத்தில்
அடிமையாய் இருந்த தமிழனை
தலை நிமிர செய்த நாளிதழ்!

1942 -ல் துண்டறிக்கையாய்
உதித்து

1948 - ல்
வார இதழாக மெருகேறி
1960 - ல்
நாளிதழாக அரங்கேறிய முரசொலியே!

தலைவர் கலைஞர் பேனா உதிர்த்த முத்துக்களால்
தமிழர்க்கு தன்மானம் -
சுயமரியாதை -
பகுத்தறிவு
என்கிற சொத்துக்களை
மீட்டெடுத்தாய்!

கலைஞரின்
உடன்பிறப்பே என்கிற மடலால்

உயிர்த்தெழுந்த தமிழினம்

தளபதியின்
உங்களில் ஒருவன் மடலால் ஒன்றிணைந்தது!

இன்றைய செய்தி நாளைய வரலாறு
ஆம்

வரலாறாய் மட்டுமில்லாமல்
எதிர்வரும் தலைமுறைக்கும் கல்வெட்டாய்
காட்சி தரும் முரசொலியே!

உனதொலி எதிரிகளின் செவிப்பறையை கிழிக்கட்டும்

துரோகிகளின் முகத்திரையை விலக்கட்டும்

எட்டுத்திக்கும்
உனது முரசு ஒலிக்கட்டும்!

நூற்றாண்டு விழா காணப்போகும் கலைஞரின்
மூத்த பிள்ளையே...
வைரவிழா கண்ட கழகத்தின் செல்லப்பிள்ளையே

பவள விழா கடந்து நூறாண்டை
நோக்கிப் பயணிக்கும்
எங்கள் முரசொலியே
வாழிய வாழியவே...........!



**ஆர்.கே.நகர்,**
**என்.மருதுகணேஷ்**
**கழக சட்டத்துறை**
**துணைச் செயலாளர்.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஞா. மணிமாறன்

### ஆகஸ்ட் 11 (1984)



**மாணவ பருவம் தொட்டு கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு 1958ல் கழக உறுப்பினராகி, 1966ல் தனது ஆசிரியர் பணியிலிருந்து விலகி முழுநேர கழகப் பணியாற்ற தொடங்கினார்.**

**1969ல் ‘கலைஞர் மன்றம்’ என்ற அமைப்பை துவக்கி, அதன் செயலாளராகவும் பின்னர் 1971ல் சிவகிரி பேரூர்க் கழகச் செயலாளராகவும், 1977 முதல் 1984 வரை வாசுதேவநல்லூர் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**‘வரதராஜன் கலைக்குழு’ எனும் கலைக்குழுவை துவக்கி அதன் மூலம் கழகத்தின் கொள்கைகளை பட்டிதொட்டியெங்கும் பரவிடச் செய்தார்.**

### தலைமைக் கழகம்
### தி.மு.க.